காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

9—4—72

★

உள்ளே......

காயிதே மில்லத் மறைவு! (தலையங்கம்)

எல்லோரும் இந்நாட்டு மன்னர் (3) (டாக்டர் அறிஞர் அண்ணா)

ஆறுவது மதுப் பாட்டில்! (சிறு கதை)

காரைக்குடிக்குக் காதுகள் இல்லையா? (சிறப்புக் கட்டுரை)

விலை 25 காசு

உன்னை நீ தெளி!

— கருமலைத் தமிழாழன் —

★

உன்னை நீ தெரிந்துகொண்டால்
உள்ளத்தில் தெளிவமையும்
உன்னை நீ புரிந்துகொண்டால்
உலகத்தில் வழியமையும்!
பிறராலே உயர்ந்திட்டோம்
பின்னடைந்தோம் என்கின்ற
வறண்டமன வாட்டங்கள்
வருகின்ற நிலைமாயும்!

ஆசைக்கு அணையிட்டு
ஆக்கத்திற் வினையாற்றின்
பூசைக்கு மலர்குவியும்
உயர்வெற்றி தலைபாயும்!
மெய்யுக்கு துணைநின்று
நேர்மைக்குக் கைகொடுத்து
பொய்யுக்குத் திரையானால்
புகழுந்தன் கால்சாயும்!

ஈனத்திற் மயங்காது
இருட்டினிலே நுழையாது
மானத்தின் உள்ளிருந்தால்
மதிப்புன்னை தேடிவரும்!
அறிஞர்கள் கூட்டத்தில்
அனைவருமே புகழ்பாடும்
குறியாக நீயிருந்தால்
குன்றத்து விளக்காவாய்!

வினா-விடை

கோயம்புத்தூர் விவசாயிகளது மின் கட்டணப் போராட்டம் பற்றி உங்களது கருத்து என்ன?

காயசண்டிகையின் பசியை அடக்க உணவுப் பண்டங்களால் மட்டும் முடியாது என்பதுதான்!

ஃ ஃ ஃ

உலகத்தில் எந்தப் பகுதியிலாவது இப்போது 'நரபலி' வழக்கிலிருக்கிறதா?

உலகத்தைத் தேடி ஓடுவானேன். இந்தியாவுக்குள்ளேயே இருக்கிறதே! பஞ்சாப் மாநிலத்தில் குர்தாஸ்பூருக்கருகில் உள்ள தினு நகரில் அண்மையில் ஒரு 3½ வயதுக் குழந்தையை 'நரபலி' ஆகுதி கொடுத்து மகிழ்ந்திருக்கிறதையா ஒரு கூட்டம்!

ஃ ஃ ஃ

மீண்டும் இந்திப் பிரச்னை எழ வாய்ப்புண்டா?

நிச்சயமாக! குடியரசுத் தலைவர் பேசியகூட்டத்திலேயே செருப்பு வீசப்பட்டிருக்கிறதையா அண்மையில், இந்திப் பிரச்னைக்காக! அனைத்திந்தியாவும் ஒரு குடையின் கீழ் மீண்டும் வந்து விட்ட பின்னர், புதிய வேகம் பிறக்காதா அவர்களுக்கு! நாம் நம்மை எந்த நேரமும் தயாரில் தான் வைத்திருக்கவேண்டும்.

ஃ ஃ ஃ

கேரளாவில் போராட்டங்களும், வேலை நிறுத்தமும் ஏற்படுவதே இல்லையா?

கம்யூனிஸ்டுகளது ஆட்சியென்றால் மட்டும் அவைகள் இராது என்று பொருளா? இரஷ்யாவிலே கூட அவை முழுதாக ஒழிக்கப் படவில்லையே!

ஃ ஃ ஃ

"அடிப்படை உரிமை" என்பதற்குச் சிறு விளக்கம் தேவை?

"ஆண்டவனே அனைத்தும்" என்று கூற ஒரு கூட்டத்துக்கு உரிமை இருப்பதுபோல், "ஆண்டவனால்தான் அழிவு" என்று கூற இன்னொரு கூட்டத்துக்கும் உரிமை இருக்கவேண்டும் என்று எடுத்துக்காட்டுவதுதான் அடிப்படை உரிமை. அவன் நாத்திகம் பேசுகிறான் என்று மற்றவர்கள் எடுத்துக் காட்டி 'ஆண்டவனால் அழிவு' எனக் கூறுபவனை நீதிமன்றத்துக்கு அழைக்கிறார்களே, அதுதான் அந்த உரிமை பாகுபாடு காட்டுகிறது என்று பொருள். வேறு விதமாகச் சொல்வதானால், வானொலி நிலையங்கள் "பக்திப் பாடல்கள்" என்று நாட்டைப் படுகுழிப் பாதைக்கு அழைத்துச் சென்றுகொண்டிருக்கும்போது, அதனைத் தடுத்த நிறுத்த நாம் உரிமை மறுக்கப் பட்டிருக்கிறோமே, அதுதான் உரிமை மறுப்பு என்று சொல்லலாம்! அடிப்படை உரிமை கொலைகாரனுக்கும் உண்டு; கொலை செய்யப் படுபவனுக்கும் உண்டு!

ஃ ஃ ஃ

'விட்டுக் கொடுத்தல்' என்பது கோழைத்தனம் ஆகுமா?

ஆளையும், சந்தர்ப்பத்தையும் பொறுத்த விஷயம் அது,

ஃ ஃ ஃ

ஆசிரியப் பெருமக்களை, "குடும்பக் கட்டுப்பாடு" போன்ற பொதுப் பணிகளில் ஈடுபடுத்துவது பற்றி உங்கள் கருத்து என்ன?

இதில் உங்கள் கருத்து எதுவோ, அதுவே எங்கள் கருத்தும்!

ஃ ஃ ஃ

மாநில சுயாட்சி என்பது தூக்கு மேடைக்குச் சமம் என்று ஒரு வார இதழ், கார்ட்டூன் படம் போட்டிருக்கிறதே? என்ன சொல்கிறீர்கள்?

கிலோ சர்க்கரை பத்து ரூபாய் என்றாலும் வாங்கிச் சுவைக்க முடிந்தவர்கள் நடத்தும் ஏட்டில் தானே வந்திருக்கிறது! கார்டு ஒன்றுக்கு ஒரு கிலோ சர்க்கரைக்குமேல் ஏன் கொடுத்தாய் என்று டில்லி அரசு தமிழக அரசைக் கேட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறதே, அதனை இந்த இதழாசிரியருக்குக் கவனமூட்டுங்கள்!

ஃ ஃ ஃ

வலது கம்யூனிஸ்டுகள் எப்படி இருக்கிறார்கள்!

புதிய கூட்டணியில் காமராசரைச் சேர்த்துக் கொள்ளலாமா? கூடாதா என்று கருத்தரங்கம் நடத்திக் கொண்டிருக்கிறார்களாம்!

ஃ ஃ ஃ

"பொருளாதாரம்" என்றால் என்ன?

பொருளே ஆதாரம் என்பது தான்!

ஃ ஃ ஃ

லாரி உரிமையாளர்கள், வேலை நிறுத்தத்தை திரும்பப் பெற்றுக் கொண்டது குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

வீண் பிடிவாதம், நீண்ட காலத்துக்குச் சோறுபோடாது என்று!

★

சுருதி குறைந்தது!

வங்க தேசத்தின் மெய்ப்பாட்டை அமெரிக்க அரசு, இந்தக் கிழமை 4-ஆம் நாளன்று அங்கீகரித்துவிட்டிருக்கிறது.

இது குறித்த அறிவிப்பில் அமெரிக்கா, அமெரிக்க நாட்டு மக்களது வெற்றி இது எனக் குறிப்பிட்டிருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

அமெரிக்காவைச் சேர்த்து இதுவரை 57 நாடுகள் வங்க நாட்டை ஏற்றுக் கொண்டுவிட்டன.

ஐந்து வல்லரசுகள் என்பனவற்றில் இனி சீனு மட்டுமே ஏற்கவேண்டியிருக்கிறது.

அதுவும் விரைவில் நடைபெறக் கூடும்.

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 13   ஆறுமாத சந்தா ரூ. 6-50

மலர் 8 | 9—4—72 | இதழ் 39

காயிதே மில்லத் மறைவு

இந்தக் கிழமை 4-ஆம் நாள் நள்ளிரவு 1-15 - மணிக்கு, இந்திய முஸ்லிம் லீக்கின் தலைவரும், காயிதே-மில்லத் என்று அனைத்துத் தரப்பினராலும் அன்புடன் அழைக்கப்பட்டு வந்தவருமான முகம்மது இஸ்மாயில் அவர்கள், சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையில், மீளாத் துயிலில் ஆழ்ந்தார் என்ற செய்தி கேட்டு, முஸ்லிம் சமுதாயம் மட்டுமல்லாமல், தமிழ்ச் சமுதாயமும் துயரத்தில் மூழ்கி இருக்கிறது.

கல்லீரல் தொடர்பான கடுமையான நோய் காரணமாகவே, அவரது ஆவி அடங்கிற்று என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சென்ற சில தினங்களாகவே, அவர் உணர் விழந்த நிலையில் இருந்தார். தமிழக அரசின் அமைச்சர்களும். பெருந்தலைவர்களும் அவரை, அடிக்கடி மருத்துவ மனைக்குச் சென்று பார்த்து வந்திருக்கிறார்கள்.

மருத்துவர்கள் அடங்கிய குழு ஒன்று, காயிதே மில்லத் அவர்களது உடல் நிலையைக் கண்காணித்து வந்திருக்கிறது.

என்றாலும், முஸ்லிம் லீகின் தலைவரது மறைவைத் தடுத்து நிறுத்த முடியாமலே போய்விட்டிருக்கிறது.

அரசியல்தொடர்பாக, லீகிக்கும், மற்றும் அதன் வேறு சில தலைவர்களுக்கும் கருத்து வேறு பாடுகள் சில சந்தர்பங்களில் ஏற்பட்டபோதெல்லாம், காயிதே மில்லத் அவர்கள் நடு நிலைமையுடன் அவற்றையெல்லாம் தீர்த்து, சமுதாயப் பிணைப்பு சிதறிவிடாதிருக்கும் சீரிய பணிகளைச் செம்மையாய்ச் செய்து வந்திருக்கிறார்.

கடந்த இருபதாண்டுக் காலத்துக்கும் மேலாகவே அவர், அனைத்திந்திய முஸ்லிம் லீகின் தலைவராகத் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறார் என்பதிலிருந்தே முஸ்லிம் பெருமக்களுக்கு அவரிடமிருந்த அன்பும், பெருமதிப்பும் புரிந்துகொள்ளப் போதுமானதாகும்,

தமது 76-ஆவது வயதில், அவர் தனது பெரும் பயணத்தைத் தொடங்கி விட்டாலும், இளமையில் அவர், முதன் முதலாக அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சியின் ஆதரவாளராகமட்டுமல்லாமல், செயல் வீரராகவும், இருந்து வந்திருக்கிறார்.

காந்தியடிகள் தமது ஒத்துழையாமை இயக்க அறிவிப்பினை வெளியிட்டபோதில், கல்லூரியில் திறமை மிக்க ஒரு மாணவராக விளங்கி வந்த முகம்மது இஸ்மாயில் அவர்கள், அந்தக் கல்லூரிக் கல்வியையே துச்சமெனத் தூக்கியெறிந்திருக்கிறார்!

முதன் முதலாக 1946—52-இல் சென்னை சட்ட மன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், 1948—50-இல் அரசியல் நிர்ணய சபையிலும் பங்கேற்றுத் தம் பணியைச் சீருறச் செய்து புகழ் நாட்டிக் கொண்டிருக்கிறார். 1926 முதல் அவர் நாடாளுமன்றத்திலும் உறுப்பினராக இருந்து வந்திருக்கிறார்.

தமிழ் நாட்டில், மான்மான மறவர் குலத்தின் ஒரே தலைவனான முத்துராமலிங்கத் தேவர் மட்டுமே, தனது தொகுதிக்குச் செல்லாமலேயே தேர்தலில் வெற்றி வாகை சூடும் வரலாறு படைத்துக் கொண்டிருப்பதுபோல, கேரளத் தொகுதியில் போட்டியிட்டு, தொகுதிக்குப் போகாமலேயே வெற்றி பெறும் பெருமைக்குச் சொந்தக்காரராக அவர் இருந்து வந்திருக்கிறார்.

தமிழ் நாட்டில் மட்டுமல்லாது, துணைக்கண்டத்திலேயே அரசியல் ரீதியாக காயிதே மில்லத் அவர்களுக்கும், மற்றைய அரசியல்கட்சித் தலைவர்களுக்கும் முரண்பாடுகள், கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டிருந்தன என்றாலும், அமரர் அண்ணா, கலைஞர், பெரியார் ஈ. வெ. ரா. ராஜாஜி போன்றவர்களாலும், அனைத்திந்திய மட்டத்தில் நேரு போன்றவர்களாலும்கூட மதிப்புடன், பாராட்டி மதிக்கப்பட்டு வந்த பெருந்தலைவராகவே அவர் இறுதி வரையில் இருந்து, இன்னுயிர் நீத்திருக்கிறார்.

தமிழ்ப் பெருமக்களுக்கும், முஸ்லிம் சமுதாயத்திற்கும் ஒரு இணைப்புப் பாலமாக இதுவரையில் அவர் செயலாற்றி வந்திருப்பதனை தமிழகம் மறந்து விட முடியாது.

தமிழக முஸ்லிம் லீக் கட்சிக்கும், காயிதே மில்லத் அவர்களது குடும்பத்திற்கும், அமரர் அண்ணாவால் தோற்றுவிக்கப்பட்டு திராவிட சமுதாயத்திற்குத் துவளாது தொண்டாற்றி வரும் 'காஞ்சி' இதழும், தனது இதயார்த்தமான இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

இராவண விழா

காவியப் புகழ்ப் பெற்ற கம்பனின் பேரால் நாடெங்கும் கவியரங்கங்கள், கருத்தரங்கங்கள், மாநாடுகள், பட்டி மன்றங்கள் முதலானவைகள் நடைபெறத் தொடங்கி இருக்கும் இந்த நேரத்தில், தமிழர்தம் மானங் காத்த மாவீரனாக இதிகாசத்தில் இருந்து கொண்டிருக்கும் இராவண விழா பற்றிய ஒரு சிறப்புக் கட்டுரை, இந்த இதழில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

வானொலி நிலையங்களின் முழு நாளைய பணியும், தமிழ் நாட்டில் கடந்த 40 ஆண்டுக் காலமாக ஆற்றி வந்த பகுத்தறிவுப் பிரச்சாரத்தின் அரும் பணியை அழித்து ஒழிக்கக் கூடிய வகையில் மாற்றிக்கொண்டு வருகிறது என்பதனைத் தமிழ் மக்கள் கண்டு கொள்ளாமலிருக்க மாட்டார்கள்.

நாடு மீண்டும், புயல் வேகத்தில் பகுத்தறிவுப் பணியினைத் தொடங்கவேண்டியிருக்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டிருக்கிறது என்பதனை தமிழ்ச் சமூகம் உணர்ந்து தீரவேண்டும்.

முதல் கட்டமாக, இனி நாடெங்கும் இராவண விழாக்கள் நடைபெற, அந்தச் சிறப்புக் கட்டுரை தடம் அமைக்குமானால் தமிழ்ச் சாதி விழித்துக் கொள்ளத் தொடங்கிவிட்டது என்பதற்குச் சான்றாக அமையும்.

இராவண விழா, பட்டி தொட்டியெங்கும் நடைபெற கழக அமைப்புக்களும், திராவிடக் கழகத் தோழர்களும் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்!

—திருவாரூர் முத்துராமன்.

"காரைக்குடிக்குக் காதுகள் இல்லையா?"

கேள்விக்குறி சிலரைக் கேள்விக் குறியாகவே ஆக்கலாம்!! கேள்விக்குறியாகவே தங்களை ஆக்கிக்கொண்டவர்களிடமிருந்து, "இப்படிக் கேட்க இவன் யார்? ஏன் இப்படிக் கேட்டான்? இவனுக்கென்ன பித்தமா?" என்றெல்லாம் பல கேள்விக்குறிகள் தோன்றலாம்!! என்னுடைய கேள்விக்கு விடை, கேள்விக்குறியாகவே இருந்திடக் கூடாது என்ற அச்சவுணர்வோடே என் கருத்தைக் காரைக்குடிக்கும், அதன் வழி தமிழ் நிலத்திற்கும் காணிக்கையாக்கிட விரும்புகிறேன்.

கம்பனையும், கம்பனின் காவியத்தையும் நீண்ட நெடுங்காலமாகவே சிந்தனைக் கணைகளால் துளைத்துக் கொண்டிருக்கும் காரைக்குடி வாழ் பகுத்தறிவுச் சிங்கங்களையும், சுயமரியாதை இயக்க வீரர்களையும், இவர் வழி வந்த எழுச்சித் திருவுருவங்களைத்தான் நான் காரைக்குடி என்ற சொல்லால் குறிப்பிட்டுள்ளேன். எனவே, காரைக்குடியில் பகுத்தறிவுக் கனல் வளர்த்து, மூடக் கருத்து முட்காடுகளை எரித்துவரும் சிந்தனையாளர்களைத்தான் நான் 'உங்களுக்குக் காதுகள் இல்லையா?' என்று கேட்கிறேன், நீங்களும் பொறுத்துக் கொள்ளலாம் நானும் மன்னிப்பு வேண்டலாம்.

காதுகளும் இருந்து, அவைகளுக்குக் கேட்கும் ஆற்றலும் இருந்தால், இத்தனை யாண்டுகளாகக் காரைக் குடியில் கம்பரசம் பெருக்கெடுத்தோட, அதில் மூழ்கிக் களிப்போரின் முழக்கமெல்லாம் கேட்டிருக்க வேண்டுமே!! கேட்டிருக்குமேயானால், இத்தனையாண்டுகளாக என்ன செய்தீர்கள்? பள்ளத்தை நோக்கிச் செல்லும் ஆடுகளே' என்று பழித்துக்கொண்டிருந்தால் மட்டும் போதுமா? ஆடுகளுக்கு அறிவுறுத்த வேண்டாமா? அதுவும், அறிவுறுத்த வேண்டிய நேரத்தில், சமயத்தில் அறிவுறுத்த வேண்டாமா?

அந்தப் பணியில் ஏன் ஈடுபடவில்லை!!

(இரா)மாயண நாடகங்களைப் போட்டுக் காட்டினோம்; உண்மை!! இராமனின் கீழ்மையை ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகவும் எடுத்துக் காட்டினோம்; உண்மை!! தந்தை பெரியார், கோடிக்கணக்கான ஆதாரங்களைக் குவித்துக் காட்டினார்; மறுக்க முடியாத உண்மை!! புராணங்களில் தீயிட்டு, அதன் பொய்மையை விளக்கினோம்; மாபெரும் உண்மை!! பெரிய—பெரிய தமிழ் மலைகளோடெல்லாம் அண்ணா அவர்கள் வாதிட்டுப் புறங்கண்டார்; வரலாறு ஏற்றுக் கொண்ட உண்மை!! சின்னஞ்சிறு நூல்களாகக் குறைந்த விலையில் வெளியிட்டு நாடெல்லாம் பரப்பினோம்; நாமறிந்த உண்மை!!

இத்தனைக்குப் பிறகும் இரண்டு மூன்று நாளாகி, மூன்று நாள் நான்கு நாளாகி, காரைக்குடியில் கம்பன் விழா என்ற நிலைமாறி, புதுவையில் தொடர்ந்து ஏனைய சிலஊர்களும் இணைந்தன என்னும் நிலையில் வளர்வானேன்? அவர்களுக்குள்ள வாய்ப்புவசதிகள் என்று நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டால், இன்னும் எத்தனைப் பெரியார்களும், அண்ணாக்களும் வந்தாலும் நம்மை விழிக்கவைக்கமுடியாது.

புலவர் அரிமதி தென்னகன்

இராமவிழா என்ற பெயரால் அவர்களால் நடத்த முடியவில்லையே; அதுயாரால்? நம்மால் தானே; நம்பணியால்தானே;

கதை எப்படியோ போகட்டும்; அந்தக் காவியச்சுவையைமட்டும் பார்ப்போமே என்னும் நிலைக்குக் கம்பனடிப் பொடிகளின் கருத்தை மாற்றியது நமது— இயக்கப்பணி தானே;

இராமாயணப் பொய்மைகளுக்கெல்லாம் புதிய புதிய விளக்கங்களையும், தத்துவங்களையும் இராம தாசர்களைத் தேடித்தேடி ஆராய்ந்திட வைத்தது நம்முடைய அரிய பணிதானே; இவற்றைமட்டும் நீ மறக்கலாமா என்று என்னை மடக்க நினைப்போர்க்கு, இவற்றையெல்லாம் நான் அறியாதவனல்லன் என்பதைமட்டில் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சிறப்புக் கட்டுரை!

பகைவன் போர் முறையை மாற்றிக் கொண்டால், அவன் பயந்துவிட்டான் என்று நாம் நினைத்துக் கொள்ளக் கூடாதல்லவா?

கம்பன் பெயரால் விழாக்கள் நடைபெற்றாலும், காவியச் சுவை எடுத்துக் காட்டப் பெற்றாலும், அரங்கத்தில் இராம பஜனைதான் நடக்குமே தவிர வேறல்ல; எப்படிப் பார்த்தாலும் காவியச்சுவை, கன்னித் தமிழ்ச் சுவை என்னும் பெயரால் இராமன் கடவுளாக்கப் படுகிறான் என்பதை உணர்ந்தால், காரைக்குடி கையைக் கட்டிக் கொண்டிருப்பது நன்கு புரியும்.

எத்தனையோ முறை பெரியார் வந்தார்; எத்தனையோ கூட்டங்களில் பேசினார்; இராமனையும் கம்பனையும் பிய்த் தெறிந்துவிட்டார்: இதைவிட வேறென்ற வேண்டும் என்று தங்களைத் தாங்களே அமைதிப் படுத்திக் கொள்வதில் பயனில்லை.

எதிரி வைத்துள்ள ஆயுதம் எந்த வகையைச் சார்ந்தது என்பதையும், அதன் ஆற்றல் எத்தகையது என்பதையும் முதலில் நாம் உணர்ந்து கொள்ளவேண்டும், அப்போதுதான் நாம் இதுவரைப் பயன் படுத்திவந்த படைக் கலன்கள் மட்டில் பகையை அழிக்கப் போதுமா என்பது புலனாகும்.

வாளுக்கு வாள்தான் பொருத்தமான ஆயுதம்; வேலுக்கு வேல்தான் வேண்டும். தூரத்தே நின்று அம்பால் எய்பவனைத் துப்பாக்கியால் தொடக்கூட முடியாது.

பட்டி மண்டபங்களும், பாட்டரங்கங்களும், கருத்தரங்கங்களும், கம்பன் விழாக் கொண்டாடுபவர்களின் ஆயுதங்கள் என்பதை எண்ணிப் பார்த்தால், பொதுக் கூட்டம் என்னும் நம் படைக்கலன் தரும் பயனின் அளவை நாம் உணர்ந்துகொள்ள முடியும். இலக்கிய உணர்வால் எழுப்பப்பெறும் மூடச் சுவரை, புரட்சி இலக்கியப் புதுமை உணர்வைக் கொண்டுதான் நாம் இடித்துத் தள்ளவேண்டும். பொதுக் கூட்டங்களில், இரண்டு மணி நேரத்திற்குள் நூற்றுக் கணக்கான பிரச்சனைகளை விளக்கும்

(15-ஆம் பக்கம் பார்க்க)

காஞ்சீபுரம்

தம்பி !

எல்லோரும் இந்நாட்டு மன்னர் (3)

இந்தக் கிழமையாகிலும் மன்னனைக் காண முடிகிறதோ இல்லையோ என்றெண்ணி ஏக்கமடையாதே, காணலாம்! மன்னர்கள் பலர் உளர்; சிலரைக் காணலாம்!! காணுமுன்பு இதனை எண்ணிப்பார்; முடிஅரசு முறை தீது, ஆகாது, தேவையற்றது என்று கூறுவது மிகச் சுவையுள்ள, மிக எளிதிலே எவரும் ஒப்புக்கொள்ளத் தக்க அரசியல் தத்துவம் என்பது நிலைத்து நின்றான பிறகும், மன்னர்களைக் காண்பது என்றால், ஓர் ஆவல், பரபரப்பு உணர்ச்சி உன்போன்றார், உள்ளங்களில்கூட ஏற்பட்டுவிடுகிறதே, அது ஏன்? புரிகிறதா? மன்னர்கள் மமதையாளர்களாகிவிடக்கூடும், மந்தை என்றெண்ணி நடத்திடக்கூடும்—அதுபோல் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பல உள! மக்கள் தமது குடிசைகளில் உள்ள தட்டுமுட்டுச் சாமான்களை விற்றாகிலும் மன்னன் மனையாட்டியின் கருத்துக்கேற்ற மரகத மணிமாலை—வாங்கப் பணம் செலுத்த வேண்டும் என்று கூறிய முடி அரசுகளும் இருக்கின்றன. எனக்கு மட்டும் அவன் கிடைத்துவிட்டால், இரு கரங்கள் போதும், வாள் வேண்டாம், வேல் வேண்டாம், கழுத்தை நெறித்தே காதகனைக் கொன்றுபோடுவேன்; கற்பழிக்கப்பட்ட கன்னியரின் கண்ணீரை எண்ணிக்கொண்டால் போதும், இந்த என் கரங்கள், இரும்பினும் வலிவுடையனவாகும்—என்று புரட்சிப்பொறி பறந்திடப் பேசிய வீரர்களை, முச்சந்தியிலே தூக்குமரம் நாட்டி, அதிலே பிணமாக்கித் தொங்கவிட்ட மன்னர்களும் இருந்திருக்கிறார்கள். எனினும், இன்றும், இவ்வளவு சுவையுடன் 'ஜனநாயகம்' பேசும் இந்த நாட்களிலேயும், எங்கிருந்தாகிலும் யாரேனும் மன்னன் வருகிறான் என்றால், பார்க்கவேண்டும் என்று மக்களுக்கு ஆவல் பொங்குகிறது.

தலைவர்கள், நடிகர்கள், வெற்றி வீரர்கள், ஆகியோரைக் காணவும் மக்களுக்கு ஆவல் எழத்தான் செய்கிறது; ஆனால், அந்த ஆவல் அவர்கள் தத்தமது துறைகளில், பாராட்டத் தக்க திறம் காட்டி, மக்களின் மனதை ஈர்த்த பிறகே, ஏற்படுகிறது.

1960-ஆம் ஆண்டு தமிழ்நாட்டு அரசியலில், பரபரப்பும் விறுவிறுப்பும் ஏற்பட்டது. அவ்வாறு ஏற்படக் காரணமாக இருந்தவை, அமரர் அண்ணாவின் கட்டுரைத் தொடர்கள். அத் தொடரின் மூன்றாவது கட்டுரை இது. 13-11-'60 அன்று 'திராவிட நாடு' இதழில் வந்தது.

ஆனால், மன்னர்களைக் காணவேண்டும் என்ற ஆவலோ, அவன் மன்னன் என்பதற்காகவே ஏற்பட்டுவிடுகிறது—தரம், திறம், வெற்றி எதுவும் அவ்வளவாகத் தேவைப்படுவதில்லை.

இந்த நிலை, பழைமையை விட்டுவிடத் துணிவு இல்லாத இந்த நாட்டிலே மட்டும் என்பதற்கில்லை; புரட்சி

பூத்திட்ட சோவியத் நாட்டிலே, இப்போது மன்னர்கள் ஒருவர்பின் ஒருவராகப் 'பவனி' வருகிறார்கள்; மக்கள் கண்டு மகிழ்கிறார்கள்.

என்ன எண்ணிக் கொண்டு, ஜார் மன்னனை ஒழித்துக் கட்டிய புரட்சிப் பரம்பரையினர், இந்த மன்னர்களைப் பார்க்கிறார்களோ! அப்படி அங்கு செல்லும் மன்னர்களும், சோவியத் மக்களைக் கண்டு புன்னகை புரிகிறார்களே, அதற்குத்தான் என்ன பொருளோ? யாரறிவர்!!

'மைசூர் மகாராஜா' அமெரிக்காசென்று, காட்டு மிருகங்களைப் பற்றியும், கடவுட் கொள்கை பற்றியும் பல்கலைக் கழகங்களில் பேருரை யாற்றிவிட்டு, வருகிறார்.

'மகாராஜா'வை அமெரிக்க மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார்கள். ஆனால், தங்கள் நாட்டுக்கு ஒரு 'ராஜா' வேண்டுமென்று அவர்கள் விரும்பவுமில்லை; முன்பு இங்கிலாந்து நாட்டு அரசன் ஆணைக்கு உட்பட்டு இருந்த நிலைமையைப் புரட்சி நடாத்திப் போரிட்டு ஒழித்துக் கட்டியவர்கள், அமெரிக்கர்கள்.

அமெரிக்காவில், வரவேற்பு வைபவங்களைப் பெற்று, மகராஜா! மகாராஜா! என்று மக்களால் புகழாரம் சூட்டப்பட்டு, மகிழ்ந்திடும் மன்னர், இங்கு திரும்பி வந்ததும், 'ராஜ்யம்' பறிபோன நிலைதான் அவரை வரவேற்கிறது!

நேபாள நாட்டு மன்னர், காஷ்மீர் நாட்டு மன்னர், இவர்கள் தத்தமது நாடுகளிலே, இன்று, இந்தியப் பேரரசின் துணை தரும் வலிவின் காரணத்தால்தான், அரசாள முடிகிறது—ஆனால் அவர்கள் 'பவனி' வரும், சோவியத் போன்ற புத்தம் புதுமுறை கண்ட நாடுகளிலே, அவர்கள், புரட்சித் தலைவர்களுடன் குலவ முடிகிறது, குடி அரசுத் தலைவருடன் கொலுவிருக்க முடிகிறது, மக்களாட்சி மட்டுமே மாண்பளிக்கும் என்ற கருத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்த, நாட்டுத் தலைவர்கள், இந்த மன்னர்களுடன் உரையாடி, உலக சமாதானம் குறித்தும், நேசத் தொடர்புகொள்வது பற்றியும், பேசி அறிக்கை வெளியிடுகிறார்கள். விந்தையாக இருக்கிறதல்லவா?

ஆப்கன் நாட்டு மன்னரும், மன்னர் பரூக்கை விரட்டி, அரசுத் தலைவராகிவிட்ட நாசரும், எழில் மிகு எகிப்தில் விருந்துண்டு மகிழ்கிறார்கள், உலகு சீர் பெற வழி காண்போம் என்று செப்புகிறார்கள்.

மைசூர், திருவனந்தபுரம், கொச்சி, புதுக்கோட்டை, போபால், ஜெயப்பூர், ஜோத்பூர், பவநகர் நவநகர், பாடியாலா—இப்படியுள்ள ஐநூறுக்கு மேற்பட்ட இராஜ்யங்களை அரசாண்டு வந்தவர்களை, இந்தியப் பேரரசு வீட்டுக்கு அனுப்பிவிட்டது—எனினும் இப்போது, பிரிட்டிஷ் மகாராணி' இங்கு வருகிறார்கள் என்பதற்காக, என்னென்ன வகையான விருந்து வைபவங்கள் ஏற்பாடு செய்வது என்பதுபற்றித் துரைத்தனமே சுறுசுறுப்பாகிவிட்டிருக்கிறது.

மாலை போடலாம்—ஒன்றே ஒன்று!

விருந்து வைக்கலாம்—ஆங்கிலமுறை உணவு!

உடனிருந்து உபசாரங்களைக் கவனித்துக் கொள்ள, இலட்சுமிமேனன் எனும் துணை அமைச்சரே கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

மகாராணி, புலிவேட்டை காண்பாராம்! மகாராணியின் மணாளன், புலியைச் சுடுவாராம்!

இருவரும் சென்று, காதற்சின்னமாம் கவின்மிகு தாஜ்மகாலைக் காண்பராம்—நிலவொளியில்!!

தம்பி! பிரிட்டிஷ் மகாராணியின் வரவேற்பு வைபவத்துக்காக, அமைச்சர்கள் வண்டுபோலச் சுறுசுறுப்பாகப் பணியாற்றுகிறார்கள்-அதிகாரிகள் பம்பரமாகச் சுழன்று வேலை செய்துகொண்டுள்ளனர்.

இது 'குடிஅரசு' கொடிகட்டி வெற்றி முழக்கமிடும் காலம்—இப்போது, உலகில் மிகப் பெரிய ஏகாதிபத்யத்தை அமைத்து, பல நாடுகளை அடிமை கொண்ட, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மகாராணியாருக்கு குடி அரசு முறையை மேற்கொண்டுவிட்ட இந்தியாவில், இத்துணை சிறப்புடனும், பகட்டுடனும் வரவேற்புகள்!! பொருள் உண்டா, இதற்கு? குடி அரசு முறையிலே, மக்களுக்கு ஐயப்பாடே ஏற்பட்டு விடுமோ என்றுகூடச் சிலர் அச்சப்படுவர்—முடி தரித்தோர்முன், குடியாட்சித் தலைவர்கள், முகமன் கூறி நின்றிடும் 'அடக்க உணர்ச்சியைக் காணும் போது.

அஃதேபோல, முடிதரித்தோர், குடியாட்சித் தலைவர்களுடன் கைகுலுக்கு, கனிவு காட்டி, அவர்தம் அறிவாற்றலைப் பாராட்டிப் பேசும்போது, குடியாட்சித் தலைவர்களில், மிகமிக உறுதிபடைத்தவர்களுக்கே கூட ஒருகணம், உச்சி குளிரத்தான் செய்யும்.

குடியாட்சி முறையை மேற்கொள்ளுங்கள், என்று முடிதரித்தோருக்கு இவர்கள் யோசனை கூறுவதில்லை. முடி அரசுதான் சாலச் சிறந்தது என்று குடியாட்சித் தலைவர்களுக்கு, மன்னர்களும் அறிவுரை கூறுவதில்லை; இருவரும் ஒருவருக்கொருவர் 'அன்புரை' கூறிக் கொள்கின்றனர்; அவனியோர்க்கு வாழும் வழி கூறுகின்றனர்.

முடிதரித்தோருக்கு உள்ள பகட்டு கண்டு, குடியாட்சித் தலைவர்கட்கு, நெஞ்சில் சபலம் தட்டுகிறதோ என்னவோ, யார் கண்டார்கள். அதுபோலவே, குடியாட்சித் தலைவரானால், மக்களின் பேரன்பு கிடைக்கிறது, என்பது கண்டு, முடிதரித்தோர், மனம், குடியாட்சி முறையை நாடுமோ, என்னவோ!

ஆனால், மக்கள் இன்றும், மன்னர்களைக் காண்பதிலே, மட்டற்ற ஆர்வம் காட்டுகிறார்கள்.

ஈரான் நாட்டு மன்னருக்கு, சின்னாட்களுக்கு முன்பு ஒரு ஆண் மகவு பிறந்தது! ஆண் குழந்தை ஈன்றெடுக்காத ஒரே காரணத்துக்காகவே, ஈரான் மன்னர், தன் இதயத்தில் இடம்பெற்ற பேரழகி சுரையா மகாராணியை, விலக்கி வைத்துவிட்டார், வேறோர் மங்கையை மணமுடித்துக் கொண்டார்; அவள் பெற்றெடுத்தாள் ஆண் மகவு! ஈரான் நாடு விழாக்கோலம் பூண்டது! மன்னனுக்கு மகன் பிறந்

தான்—நாட்டுக்கு இளவரசன் பிறந்தான்—என்று குதூகலம், நாடு முழுதும்.

ஈரான் நாட்டு மன்னர், 'இளவரசனை'க் கண்டு விட்டுத் திரும்புகையில், அவருடைய மோடாரைச் சூழ்ந்துகொண்டு, ஆயிரக்கணக்கான மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்த காட்சி படமெடுக்கப்பட்டு, குடியாட்சி பரவப் பாடுபடும் நாளிதழ்களில், முதல் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

இன்றளவும், பிடிதளரவில்லை, முறை அதிகமாக மாறிவிடவில்லை, எல்லா அதிகாரமும் தமது க்ரத்திலேயே, வைத்துக்கொண்டு இருக்கிறார் அபிசீனிய நாட்டு மாமன்னர், ஹெயிலி செலாசி! சென்ற கிழமை, அவர், அரசாளத் தொடங்கி, முப்பதாண்டுகள் ஆயின என்பதைக் காட்டிட ஒரு விழா நடைபெற்றது—கோலாகலமாக!

பிரான்சு நாட்டிலே, மன்னனை விரட்டிய நாளை, இன்றும் விழாவாக்கிக் கொண்டாடுகிறார்கள்.

ரஷிய நாட்டிலே இந்த நவம்பரில், ஜார் மன்னன் ஆட்சி ஒழிக்கப்பட்ட புரட்சி. விழா நாளாக்கப்பட்டுக் கொண்டாட்டம் நடக்கிறது.

அபிசீனியா நாட்டிலே, மாமன்னர், முடிதரித்து முப்பது ஆண்டுகள் ஆகின்றன என்பதால், மகிழ்ச்சியுற்று விழா கொண்டாடுகிறார்கள்.

பேரறிவாளன் என்று போற்றப்படும் சாலமன் எனும் மன்னனுக்கும், பேரழகி ஷீபா எனும் அரசிக்கும் பிறந்த மைந்தனுடைய வழி வழி வந்தவர், அபிசீனிய மாமன்னர், என்கிறார்கள்.

இவரும் இன்றுள்ள குடியாட்சித் தலைவர்களுக்கு, நல்லாட்சி நடத்தவேண்டும் என்பது குறித்தும், உலகப் போர் மூண்டிடாமல், அறநெறியுடன் நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றியும் அறிவுரைகள் கூறுகிறார்.

இவ்விதமானதோர் விந்தையான நிலைமை இன்று இருந்து வருகிறது.

குடியாட்சி முறையை முடியாட்சி முறையுடன் இணைத்துக் கொண்டுள்ள நாடு, பிரிட்டன்.

முடியுடையோன் தலையை வெட்டினர், பிரிட்டனில், முன்போர் முறை.

மற்றோர் மன்னனை நாடு கடத்தினர்!

மிகப் பழம் காலத்திலேயே, மன்னனை மாளிகைக்குள்ளே, மடக்கி அடக்கி, அவனிடம் 'உரிமைச் சாசனம்' எழுதி வாங்கினர்—இதே பிரிட்டனில்.

இதே பிரிட்டனில், மகாராணிக்குக் குழந்தை பிறக்கப்போகிறது என்று அறிவிக்கப்பட்டதும், கொட்டும் பனியைப் பொருட்படுத்தாமல், அரண்மனைக்கு எதிரே, பெருந்திரளாக மக்கள் கூடி நின்றனர்—சேதி கேட்டு மகிழ்ந்திட!

அப்படிப்பட்ட விந்தை முறைகள் நிறைந்த பிரிட்டனை, ஆண்ட ஓர் மன்னனைத்தான், நாடகப் பேராசிரியர், நானிலம் போற்றிய பகுத்தறிவாளர், பேரறிஞர் பெர்னார்ட்ஷா, 'ஆப்பிள் கார்ட்' எனும், தமது நாடக நூலொன்றிலே, படைத்துக் காட்டுகிறார்; ஆமாம், தம்பி! உண்மையாக இருந்த மன்னன் அல்ல; சமதர்மம், குடிஅரசு, பகுத்தறிவு எனும் பல தூய கருத்துக்களைக் கருவூலமாக்கித் தந்த பேரறிஞர் பெர்னார்ட்ஷாவின் கற்பனையில் தோன்றிய மன்னன்! காண்போம் வா!

* * *

மன்னன் அரண்மனை பெரியது! கவர்ச்சிகரமானது! மன்னனுடைய நிலைமைக்கு ஏற்றதாகத் தானே அவன் இருப்பிடம் இருத்தல் வேண்டும். நமது நாட்டிலே தம்பி! கோயில்—என்றே பெயர் தந்தனர், மன்னன் மனைக்கு.

நுழைவு வாயிலைக் கடந்துவிட்டோம் — முன்புறக்கூடம்! இங்கு உள்ள அதிகாரிகளிடம் அனுமதி பெற்றுக்கொண்டுதான் உள்ளே போகமுடியும். அவர்கள் இருவரும், மன்னனுக்கு வந்த கடிதங்களைப் படித்துக்கொண்டும், இடையிடையே பேசிக்கொண்டுமிருக்கிறார்கள். என்ன செய்வது, தம்பி! கனைத்தாலும், கண் சிமிட்டினாலும், இவர்கள், தங்கள் வேலை முடிந்தாலொழிய, அல்லது என்ன காரணத்தினாலோ நம்மிடம் அக்கறை ஏற்பட்டாலொழிய, உள்ளே செல்ல, அனுமதி அளிக்கமாட்டார்கள். எவ்வளவு நேரமாகும் என்று கேட்கிறாய்—பார்வையால்! என் பெருமூச்சுக் கூறுவது புரியவில்லையா — எவ்வளவு நேரமாகுமோ எனக்கே தெரியாது.

இதுதான் அண்ணா! முடிஅரசு முறையிலே உள்ள கொடுமை—என்று கூறுவாய்.

குடியாட்சி முறையிலே மட்டும் என்னவாம்! கண்டவர்கள், கண்ட கண்ட நேரத்திலெல்லாம், அமைச்சர் பெருமானைக் காணச் சென்றுவிட முடியுமா? 'நந்தி பூஜை' அங்கு இல்லையா?

இராஜகோபாலாச்சாரியார் அமைச்சராக வந்த உடன், குடியாட்சி முறையின் அருமை பெருமையை உயர்த்தும் நோக்குடன், தன்னை எவரும் எந்த நேரத்திலும் வந்து பார்க்கலாம், என்று கூறினார். ஒரே கொண்டாட்டம் மக்களுக்கு! காங்கிரஸ் வட்டாரத்திலே பெருமகிழ்ச்சி! ஆனால், என்ன நடந்தது, தெரியுமோ? தம்பி! அணி அணியாகக் காங்கிரஸ் தலைவர்களும் தொண்டர்களும், வந்து பார்த்தபடி இருந்தனர்—வேறு வேலை பார்க்கவே நேரம் கிடைக்கவில்லை. கூப்பிய கரத்தை, மடக்க முடியவில்லை! சிரித்த முகம்—மாறக்கூட நேரம் கிடைக்கவில்லை. கடைசியில், இது ஆகாது என்று உணர்ந்து, ஆச்சாரியார், முதலில் செய்திருந்த ஏற்பாட்டைக் கைவிட்டுவிட்டார்.

குடியாட்சியிலேயே இது என்றால், முடியாட்சியிலே, கட்டு, காவல், தடை, இவை அதிகமாகத் தானே இருந்திடும்!

அதிகாரிகள் நமது பக்கம் திரும்பிப் பார்ப்பதாக இல்லை—தம்பி! அடுத்த கிழமை காண்போம், மன்னனை.

அண்ணன்,

அண்ணாதுரை



தெளிவு பெறமாட்டார்கள்!

அன்புள்ள நண்பா!

ஆங்கிலத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். மிகவும் பரிதாபகரமான ஆனால் மிக மிகப் புத்தி சாலித்தனமானதாக இருக்கும் அந்தப் பழமொழி. பழமொழியென்றால் தமிழகத்தில் பழக்கத்திலிருக்கிறதே, "கேழ்வரகில் நெய் வடிகிறதென்றால், கேட்பவனுக்குப் புத்தி எங்கே போயிற்று?" என்று, வினா வடிவில்! அதைப்போல வினா வடிவில்—ஆனால் தெளிவான விளக்கத்தைக் கொண்டதாக அல்ல; கேட்பவனது புத்திசாலித்தனத்தையும், பதில் தருபவனது புத்திக் கூர்மையையும் சரியான மதிப்பீடு செய்யத் தக்கதாக ஆனால் நெருக்கடியான நிலையை உண்டாக்கத் தக்க வினா வடிவில் உள்ள பழமொழி அது.

நெய்யென்று ஒருவன் சொன்னவுடன், சட்டென்று நினைவுக்கு வருவது, தயிரைக் கடைந்து எடுப்பது என்பதுதான். அதனை நினைவு கூர்ந்து விட்டுத்தான், மிருகக் கொழுப்புக்களிலிருந்தும், தாவரங்களிலிருந்தும், மருந்துக் கலவைகளிலிருந்தும், கூட நெய்யென்று கூறத்தக்க திரவப் பொருள்களைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று ஆராய்ச்சி மனம் படைத்தவன் நினைத்துப் பார்ப்பான்.

கேழ்வரகில் நெய் வடிகிறது என்றால், கேட்பவன் முதலில் தயிரிலிருந்து கிடைக்கும் நெய்யை நினைவு கூர்ந்து விட்டுத்தான், மற்றவைபற்றி எண்ண ஓட்டத்திலீடுபடுவான்.

கேழ்வரகில் நெய்வடியுமா தம்பி, அவனும் சொல்கிறான் நீயும் நம்புகிறாயே என்று கேட்பதுபோல உன் புத்தி எங்கே போயிற்று என்று "எல்லாம் தெரிந்த" இன்னொருவன் கேட்கிறான். ஆக,

கேழ்வரகில் நெய் வடியாது என்ற பேருண்மையையும் அந்த வினா, தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கிறது.

"நீ உன் மனைவியை அடிப்பதை நிறுத்திவிட்டாயா?"

—என்பது கேள்வி.

கேள்வி கேட்டவன் புத்திசாலி. பதில் சொல்பவன் ஒன்று "ஆமாம்" என்று சொல்ல வேண்டும்; அல்லது "இல்லை" என்று சொல்லவேண்டும். அவன் சராசரி அறிவு படைத்தவனாக இருப்பானானால்.

இரண்டில் எந்தப் பதிலைச் சொன்னாலும், பதில் சொல்பவனைக் "குற்றவாளி"யாக மட்டுமல்ல, கொடுமைக்காரனாகவும் சித்திரிக்க முடியும்.

"ஆமாம்"—என்று சொல்வானானால், இதுவரையில் அவன், தனது மனைவியை அடிக்கும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தான்; அவன் நாகரிகமற்றவன்; மனிதப் பண்பற்றவன்! என்று எடுத்துக்காட்டிவிட முடியும்!

"இல்லை" என்று சொன்னாலும், மேற்குறிப்பிட்டதுபோலவே, அவன் பண்பற்றவன்; இன்னமும் அத் தீயப்பழக்கத்தைக் கொண்டிருக்கிறான் என்று விளக்கம் கொடுத்துவிடக் கூடும்.

கேள்வி கேட்கப்பட்டவனோ, ஒருபோதும் அவன் மனைவியைத் தீண்டி அறியாதவன்! தீண்டி அறியாதவன் என்றால், "அடிக்க வேண்டும்" என்ற காரணத்துக்கு மட்டும்தான் என்று நினைத்துக்கொள் நண்பா!

அப்படிப்பட்டவனிடம், "நீ உன் மனைவியை அடிப்பதை நிறுத்தி விட்டாயா?" என்று கேட்டால் அவன் என்ன பதில் சொல்வான்? ஆமாம் என்றாலும் இல்லையென்றாலும் தவறல்லவா!

வினா கேட்கப்பட்டவன் கொஞ்சம் புத்திசாலி. சரியான பதிலைச் சொல்லி விடுகிறான். "ஒருபோதும் இல்லை" என்று. ஆங்கிலத்தில் இதனை "Never" என்று குறிப்பிடுவார்கள்.

வினாவும் ஆங்கிலத்திலிருந்து, விடையும் ஆங்கிலத்திலிருந்தால்தான் தெளிவான விளக்கம் பெற முடியும்.

"Never"—என்று குறிப்பிடுவதன் மூலம், தான் ஒருபோதும் அப்படிப்பட்ட கொடுமையினைச் செய்யவில்லை என்று கூறிவிடுகிறான்.

"Yes" என்பதற்கும், "No" என்பதற்கும் அப்பால் "Never" என்ற ஒரு சொல் இருக்கிறது என்பதும், அந்தச் சொல்கூட வினாவுக்கு விடையாக அமைகிறது என்பதும் உண்மையல்லவா நண்பா!

தொடக்கத்தில் குறிப்பிட்ட வினா வடிவில் உள்ள ஆங்கிலப் பழமொழி இதுதான்.

கேழ்வரகில் நெய் வடியாது — என்பது அந்த, புத்தி எங்கே போயிற்று என்ற வினவிலேயே இருப்பதைப்போல, மனைவியை நான் அடிக்கமாட்டேன் என்ற பதில், "Never" என்ற அந்தச் சொல்லில் இருக்கிறது என்பதும் உனக்குப் புரிகிறதல்லவா நண்பா!

தமிழக அரசைப் பற்றியும், தமிழ் நாட்டு அமைச்சர்களைப் பற்றியும் எந்த அளவுக்கு இன்றைக்கு தமிழக எதிர்க் கட்சிகளும், தமிழக "அவாள்" ஏடுகளும் நல்லெண்ணம் கொண்டிருக்கின்றன என்பதை நாட்டு மக்கள் நன்கறிவார்கள்.

சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் — என்பவரைவிட, ராமசாமி ஐயர் என்ற இயற் பெயரும், "சோ" என்ற புனைமகுடமும் கொண்ட "துக்ளக்" என்ற இதழின் ஆசிரியருக்கு, தமிழக அரசின்பால் மட்டுமல்ல; அமைச்சர்களின்பால் மட்டுமல்ல; தமிழ் நாட்டு மக்களின்மீதேகூட நீங்காத—நீக்கமுடியாத நல்லெண்ணம் உண்டு என்பதை, அந்த இதழின் ஒவ்வொரு பிரதியின் ஒவ்வொரு சொல்லும் ஆணித்தரமாக நிரூபித்து வந்துகொண்டே இருக்கிறது.

காங்கிரஸ்காரர்கள் நாடாண்ட காலத்தில், நடைபெருத ஊழல் ஒன்றும் இப்போது அதிகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கவில்லை. காங்கிரஸ் காரர்கள் நாடாண்ட காலத்தில் நாடெங்கும் "கள்ள மார்க்கெட்" நிலவி வந்த நிலை இன்றைக்கு தமிழகத்தில் இல்லை. என்றாலும், சாக்கடையிலேயே நெளிந்து நெளிந்து உயிர் வளர்த்துக் கொண்ட புழுவை, நல்ல இடத்தில் எடுத்துப் போட்டு, உயிர் வாழச் செய்யமுடியாது என்பதுபோல ஊழலிலும், லஞ்ச லாவண்யங்களிலும் பழுத்துக் கொழுத்துப் போனவர்களது கண்களுக்கும், காதுகளுக்கும், காண்பதெல்லாம் ஊழல் மயமானதாகவும், கேட்பதெல்லாம் ஊழல் மயமானதாகவும் தோன்றிக்கொண்டே இருப்பதில் வியப்பில்லை.

மக்களது உணர்வினைத் தட்டிவிட்டு, எழுந்த எழுச்சியிலே குளிர்காய நினைப்பது என்பது ஒருவித அரசியல். இந்த முறையில் பண்பாடு இருக்கிறதா இல்லையா என்பதெல்லாம் வேண்டப்படாத வினக்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த மட்டில், பண்பாட்டோடு, நட்புறவோடு, குடும்பப் பாசத்தோடு கட்டி வளர்க்கப்பட்ட ஒரு பேரியக்கம் என்பதை, தமிழ் மக்கள் என்போர் நன்கறிந்து கொண்டிருக்கிறார்கள்.

நல்ல பண்பாடுகள் நாட்டு அரசியலில் இடம் பெற்றிருக்கக்கூடாது என்று கருதுபவர்களால், இதனைப் பொறுத்துக்கொள்ள முடியுமா நண்பா! பண்பாடுகள் என்றால் கிலோ என்ன விலை என்று கேட்பவர்களால் இதனை அனுமதிக்க முடியுமா?

முடியாது என்பதனால்தான், தமிழகத்தில் எதிர்க்கட்சி முகாம்களில் அண்மைக் காலமாக ஊழல், ஊழல் என்ற ஒப்பாரி முகாரியாக ஒலமிட்டுக் கொண்டிருக்கிறது.

அமைச்சர்களது இல்லங்கள் அனைத்தும், மத்திய அரசின் வருவாய்த் துறையினால் சோதனையிடப் பட்டிருக்கிறது.

—என்ற வதந்தியினை வேக வேகமாகப் பரவவிட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

செல்வாக்குப் பெற்ற ஏடுகள், இதழ்கள் என்பவைகள் எல்லாம் கூட இதற்கென்று சில பக்கங்களைத் தலையங்கமாக்கி எழுதிக் குவித்துவிட்டு, ஓயத் தலைப்பட்டிருக்கின்றன.

இத்தகைய வதந்திகளைப் பரவ விடுவது, அரசியலையே ஆபத்தானதாக்கி விடக்கூடும்;

நல்லவர்கள் அரசியலுக்கு வர அஞ்சி ஒதுங்கும் நிலையைத் தோற்றுவித்து விடக்கூடும்

—என்று முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் சட்ட மேலவையிலே எடுத்துக் காட்டிக் கண்டித்திருக்கிறார்கள்.

என்றாலும் சில ஏடுகளுக்கு-ஏன் சக்கரவர்த்தியாருக்குக்கூட இதிலே ஏற்பட்ட மன அரிப்பு நீங்கவில்லை.

அனைத்துக்கும் தலைமையேற்கத்தக்க வகையில் "துக்ளக்" இதழ், இந்தப் பிரச்னைக்குப் பூதாகாரமான இடம் ஒதுக்கி, பெரிதாக்கி, பிரச்னையைச் சிக்கலாக்கியும் விட்டுப் புகழ் தேடிக் கொண்டிருக்கிறது.

தொட்டிலையும் ஆட்டி விட்டு, தொடையையும் கிள்ளி விடுவது என்ற பழமொழிக்கொப்ப, பிரச்னையையும் பெரிதாக்கிவிட்டு, மக்களின் அந்த ஐயத்தைத் தீர்க்கவும் வழிகாண்பது என்ற பெயரில் சில முயற்சிகளில் ஈடுபட்ட தகவலை, 'துக்ளக்'கின் 1—4—72 ஆம் நாளைய இதழ் நமக்குத் தந்திருக்கிறது.

அன்புடையீர்,

தமிழக அமைச்சர்கள், அவர்களுடைய நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள்—இவர்களுடைய வீடுகள் கருப்புப் பணத்துக்காகச் சோதனை போடப்பட்டதாகவும், பல முக்கியமான தஸ்தாவேஜிகள் கைப்பற்றப்பட்டதாகவும் தமிழ் நாட்டில் வதந்திகள் பரவலாக இருப்பதை நீங்கள் அறிவீர்கள் என்று நினைக்கிறோம். கள்ளக் கடத்தல் செய்யப்பட்ட தங்கம் வைரம் முதலானவை கூட கைப்பற்றப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

"ஆமாம்" அல்லது "இல்லை" என்று அதிகார பூர்வமாக இந்த வதந்திகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க விரும்புகிறேன்.

இந்த வதந்திகளில் ஏதாவது உண்மை இருக்கிறதா என்று உங்களால் கூற இயலுமா?

பொது மக்களிடையே ஆதாரமற்ற வதந்திகளைப் பரவ விடக்கூடாது என்பதில், எங்களைப் போலவே நீங்களும் ஆர்வத்தோடு இருப்பவர்

கள் என்ற நம்பிக்கையில், உங்களிடமிருந்து பதிலை ஒருவாரத்திற்குள் எதிர்பார்க்கிறோம்.

"அன்புடன்

"சோ"

என்று ஒரு கடிதத்தை, இந்தமொழி பெயர்ப்புக்கான ஆங்கில மூலத்துடன், சென்ற மார்ச் திங்கள் 3 ஆம் நாள், துக்ளக் ஆசிரியர், C. B. I. என்று சுருக்கிக் கூறப்படும் மத்திய புலனாய்வுத்துறைக்கு எழுதி இருக்கிறார்.

14—3—72 வரையிலும் Central Bureau of Investigation அதிகாரியிடமிருந்து 'துக்ளக்'கிற்குப் பதில் கிடைக்கவில்லை.

சோவின் சந்தேகம் அல்ல—

வதந்திகளைப் பரவ விடக்கூடாது என்ற ஆர்வம் இதன்மூலம் மிகுதிப்பட்டு, மறுநாள் 15—3—72-இல் மறுபடியும் C.B.I.க்கு ஒரு அஞ்சல் விடுக்கிறார் ஆங்கிலத்திலேயே!

அன்புடையீர்,

ரிஜிஸ்தர் தபாலில் அனுப்பப்பட்ட எங்களுடைய 3—3—72 கடிதம். (இத்துடன் ஒரு நகல் இணைக்கப்பட்டது).

12 நாட்கள் ஆகியும் தங்களிடமிருந்து பதில் இல்லை.



எங்களுடைய அடுத்த இதழில் (1—4—72) நாங்கள் கிளப்பிய இந்த விஷயம்பற்றி அதிகார பூர்வமான தகவலை வெளியிட விரும்புகிறோம். 'ஒப்புதல்' அல்லது 'மறுப்பு' உங்களிடமிருந்து வராவிட்டால், இந்தக் கடிதங்களைப் பிரசுரித்து விட்டு விஷயத்தை அப்படியே விட்டுவிடலாம் என்று இருக்கிறோம். நாங்கள் முன்னமேயே சொன்னபடி ஆதாரமில்லாத வதந்திகளை மக்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கக் கூடாது என்ற முயற்சிதான் இது.

இந்த வதந்திகளில் ஏதாவது உண்மை இருக்கிறதா, இல்லையா என்று எங்களுக்குத் தெரிவிக்கும்படி மீண்டும் கேட்டுக்கொள்கிறோம். உடனடியான பதிலை ஆவலோடு எதிர்பார்க்கிறோம்.

தங்களின் நேரத்தைக் கொஞ்சம் எடுத்துக் கொண்டதற்காக மன்னிக்கவும். நன்றி.

அன்புடன்,

"சோ."

இரண்டாவது கடிதத்தையும் ஆர்வத்துடன் எழுதிவிட்டு, ஆவலுடன் காத்திருக்கிறார்.

தமிழக அமைச்சர்கள் மீது கூறப்பட்டிருக்கும் இந்தப் பழிக்குப் பதில் சொல்ல வேண்டியவர்கள் C. B. I. அதிகாரிகள்தான் என்று அறிந்துதான் அந்த இதழாசிரியர், தொடர்புடைய அதிகாரிகளுக்கு விளக்கம் கேட்டு எழுதி இருக்கிறார்.

நண்பா, இந்த இரண்டு கடிதங்களையும் பிரசுரித்திருக்கும் 'துக்ளக்' இதழ், தலைப்பில்—

"தமிழக அமைச்சர்களைப் பற்றிய சில வதந்திகள்......... 'yes or no' என்று சொல்லும்படி C.B.I.யிடம் கேட்டோம்......"

என்று சுட்டிக் காட்டுகிறது. இந்தத் தொடரில் C.B.I.யின் பதில் கிடைத்த விவரம்பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது இருக்கட்டும்.

இரண்டு கடிதங்களிலுமே, அவர், அமைச்சர்கள் மீது வதந்திகள் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழக முதலமைச்சரும் இது குறித்து "இது போன்ற வதந்திகளைப் பரவவிடுவது" என்றுதான் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

ஆக, இது வதந்தி என்கிற நல்ல எண்ணத்துடன் தான், துக்ளக் ஆசிரியர் 'yes or no' என்று மட்டும் பதில் தருமாறு கேட்டுக் கொண்டிருக்கிறார் நண்பா!

மனைவியை அடிப்பவன் என்று கருதி, வினா கேட்டவன் எதிர்பார்த்த பதில்கூட இந்த 'yes or no' தானே!

அப்படித்தான் குறுகிய சொல்லாட்சியில் பதிலை எதிர்பார்த்திருக்கிறார் சோ. ஆனால்,

No Knowledge

என்ற பதில் வந்துவிட்டதே! ஏமாற்றமாக இராதா? பதில் கிடைத்தும், பிரச்னையை அவர் என்ன செய்திருக்கிறார்? விட்டுவிட்டாரா? அல்லது தொடரப் போகிறாரா? விளக்கங்களை அவர் அடுத்த இதழில் தரக்கூடும். ஆனால் C. B. I.-யிடமிருந்து அவர் பெற்ற பதிலின் முழு விவரமும் உனக்குத் தர வேண்டுமல்லவா நண்பா!

No. C. 6/1/3/2678/72

Dated: 24 March 1972.

From

Shri N. R. Suvarna,
Dy. Inspt. General of Police
Central Bureau of Investigation
Shastri Bhavan,
Madras-6.

To

The Editor,
"THUGLUG" Tamil Fortnightly
151, Mount Road, Madras-2.

Sir,

With reference to your letter dt. 3-3-1972, I am to state that the C.B.I. has no knowledge about the matter, in question. This also dispose of your remainder dated 15-3-1972.

Yours faithfully,

(Sd.) N. R. SUVARNA.

மத்தியப் புலனாய்வுத்துறை தெளிவாகப் பதிலைத் தந்துவிட்டிருக்கிறது "Never" என்று குறிப்பிடுவதைப்போல, "No knowledge"—என்று.

கேழ்வரகில் நெய் வடிகிறது என்று சொல்லக் கேட்டு, அது உண்மையா என்று விசாரித்துத்தெரிந்து கொள்ள விரும்பியவருக்குக் கிடைத்தபதில் அது!

அரசுத்துறையிடமிருந்து சிக்கலான, எந்த ஒரு பிரச்னைக்கும் கிடைக்கும்பதில் yes or no என்பதாக எந்தக்காலத்திலும் இராது. ஏனென்றால், அரசு அதிகாரிகள் எந்தக் காலத்திலும் எதற்கும் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள விரும்பமாட்டார்கள்—விரும்பத்தக்கதும் அல்ல அது.

எனவேதான் C. B. I. அதிகாரி, no knowledge என்று தன் பதிலைத் தந்திருக்கிறார்.

என்ன பொருள் இதற்கு? சோ கேட்ட வினாவுக்கு இதிலே பதில் இருக்கிறதா இல்லையா?

C.B.I. has no knowledge என்றால், C.B.I.க்கு அது குறித்துத் தகவல் இல்லை என்று சொல்லலாம்; அல்லது அது குறித்து அறிந்து வைத்திருக்கவில்லையென்றும் சொல்லலாம்!

எப்படிச் சொன்னாலும், C. B. I.-க்கு அதுபற்றி எதுவும் தெரியாது என்பதுதானே!

C. B. I. க்கு அது குறித்து எதுவும் தெரியாது என்றால், கிளப்பப்பட்டுள்ள பிரச்னை வெறும் வதந்திதான் என்பதும் அது புலனாய்வுத்துறையின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதல்ல என்பதால் பொய்யான தகவல் என்பதும் பொருளாகிறதா இல்லையா?

இந்த விளக்கங்கள், அந்த பதிலில் இருக்கிறது என்பது சோவுக்குத் தெரியாமலா இருக்கிறது? வழக்கறிஞர் ஆயிற்றே அவர்?

தவறான வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, பிரச்னையை முடித்து வைக்க வேண்டும் என்பது மட்டுமே சோவின் நோக்கமாக இருந்திருக்குமானால், அதிகாரியிடமிருந்து கிடைத்த பதிலிலிருந்து வழக்கறிஞரது நோக்கில் நின்று,

"தகவல்கள்யாவும் பொய்யானவை போலியானவை, ஆதாரமற்றவை, ஆகவே, இந்தப்பிரச்னையைத் தமிழக எதிர்க் கட்சிகள் இத்துடன் விட்டு விடலாம்."

—என்றல்லவா விளக்கம் தந்து கடிதங்களைப் பிரசுரித்து இருக்கவேண்டும். மாறாக—

"தமிழக அமைச்சர்களைப் பற்றிய, சில வதந்திகள்...'Yes or No' என்று சொல்லும்படி C. B. I.-யிடம், கேட்டோம்......'No Knowledge' என்று பதில் வந்தது.

—என்றல்லவா தலைப்பிட்டு விஷயங்களைச் சொல்கிறார்!

என்ன தெரிகிறது நண்பா! துக்ளக் ஆசிரியருக்கு இந்த விவகாரத்தில் இன்னமும் தெளிவு ஏற்படவில்லை என்றல்லவா தெரிகிறது.

தெளிவில்லாத நெஞ்சங்களுக்கு மருத்துவம், மருந்துகளிலே இல்லை என்பது எவ்வளவு உண்மையாகி விட்டது!

விரும்பி, வற்புறுத்திக் கேட்டுப் பெற்ற பதிலிலேயே அவர்கள் தெளியவில்லையானால், நண்பா, அவர்கள் தெளிவுபெற விரும்பவில்லை என்றும், தெளிவுபெற்று விடக்கூடாது என்றும் திட்டமிட்டுச் செயல்படுகிறார்கள் என்பதல்லாமல் வேறென்ன?

தமிழகத்தை அமைதியாக இருக்கவிடக்கூடாது என்பதுதான் அவர்களது அறைகூவலாக இருக்குமானால், நாம் ஏற்றுத்தானே தீரவேண்டும்! தயாராகிக் கொள்வோம்!

அன்புள்ள,

விற்பனையாகிறது!

C. N. A. பாபு

படைக்கும்

அண்ணா நினைவு மலர்

அமரர் அண்ணாவைப்பற்றி
அறிஞர் பலர் எடுத்துக்காட்டும்
ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தொகுப்பு.

விலை ரூபாய் ஒன்று

கிடைக்குமிடம்:

பாபு பதிப்பகம்,

54, முதலமைச்சர் C. N. அண்ணாதுரை தெரு,
காஞ்சிபுரம் - 3.

ஆறுவது மதுப் பாட்டில்!

(ஜே. வி. நாதன்)

புதுடில்லி சப்தர்ஜங் சாலையின் பெரிய ஓட்டல் ஒன்றில் ஐவரும் கூடினோம்.

"இட் ஈஸ் ரியலி வொன்டர்!" என்று ஆச்சர்யப்பட்டார் தலைப் பாகையும், தாடியும் கொண்ட யஷ்வந்த் சிங்.

"இதிலே என்ன ஆச்சர்யம் இருக்கு—ஞான் அறியலே!" என்று சற்றுக் கோபத்துடன் கேட்டுவிட்டு, வசதியாகச் சாய்ந்து உட்கார்ந்து கொண்டார் குஞ்சுப் பணிக்கர்.

"அல்லா இந்த விசயத்துலே கருணை செஞ்சிட்டான். ஒரு வருசத்துக்கப்புறம் நாம இப்படி சந்திக்கணும்னு அவனோட ஆணை..." பூனாவைச் சேர்ந்த முகம்மது ராவுத்தர், சர்வர் வருவதைப் பார்த்துப் பேச்சை நிறுத்தினார்.

வட்டமேஜையைச் சுற்றி ஆறு நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. சர்வர் ஒரு 'ட்ரே'யில் மதுப் புட்டிகளையும், சிறு கோப்பைகளையும் எடுத்து வந்தான். அவனுடன் ஒரு சிறுவன் சோடாப் புட்டிகளை ஏந்தி வந்தான்.

ஐந்து பேருக்கும் 'ரம்' பாட்டில்களை வைத்துவிட்டு, அருகில் சோடாப் புட்டிகள்— மதுக் கோப்பைகளையும் வைத்தான். ஆறு பாட்டில்களுக்கு ஆர்டர் செய்திருந்ததால், சர்வர் அந்த ஆறுவது 'ரம்' பாட்டிலை என்ன செய்வது என்பதுபோல் என்னைப் பார்க்க, காலியாகக் கிடந்த ஆசனத்தின்முன் வைக்கும்படி சைகை செய்தேன்.

அப்படியே வைத்துவிட்டு நகர்ந்தான் சர்வர்.

இதுவரையிலும் வாயை மூடிக் கொண்டிருந்த நாயுடுகாரு "ஏமி, ஒபன் செய்திட வேண்டியது தானே?..." என்று அவசரப்பட்டார். அவருடைய இடது தோள் பட்டையிலிருந்து இறங்கிய புஜ வளைவு, நெளிவுகள் காணப்படாமல் மொழுக்கட்டையாய் இருந்தது—அது 'பொய்க் கை' என்பது புலப்பட்டது.

ஆறு ஆசனங்கள். அந்த அந்த ஆசனத்துக்கு எதிரில் மதுப் பாட்டில்கள்.

இருந்தவர்களோ மொத்தம் ஐவர்!

மதுப் பாட்டில்களைத் திறந்தோம். சோடாவைக் கலந்து நுரைத்த கலவையை ருசித்தோம், கொஞ்சம் கொஞ்சமாக...

அந்த ஆறுவது ஆசனத்துக்கு எதிரே இருந்த ஆறுவது பாட்டில் நிமிர்ந்து உட்கார்ந்து எங்களை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தது!

2

"மைக்கேல்! நீ குற்றம் சாட்டப்பட்டிருக்கிறாய்! முதலாவது குற்றம், 'ரோல்கால்' எடுக்கும்போது நீ ஆப்செண்ட் ஆகியிருந்தாய். 21-ந் தேதி பிற்பகல் 5-30 வரை உன்னைக் காணவில்லை; அதாவது ஐந்தரை மணி நேரம்! இரண்டாவது குற்றச்சாட்டு; நீ குடித்திருந்தாய்! மூன்றாவது, ஒரு 'நான்—கமிஷன்டு ஆபீச'ராக இருந்தும் கடமையில் உதாசீனம் காட்டியது..."

கர்னல் தன் நாற்காலியைப் பின்னுக்கு உதைத்துத் தள்ளிவிட்டு எழுந்தார். அவருக்கு எதிரே நின்றிருந்தான் மைக்கேல். துப்பாக்கி முனையிலிருந்து சீறிப் புறப்படும் குண்டைப் போல் கனமான மீசைப் புதருக்குள் மறைந்திருக்கும் அவருடைய வாயிலிருந்து என்ன வார்த்தைகள் வருமோ என்று பதைத்துக் காத்திருந்தான் அவன்.

மைக்கேலின் நடத்தை பற்றிய விபரங்கள் அடங்கிய அட்டையைப் பார்வையிட்டார் கர்னல்.

"இது உன்னுடைய ஐந்தாவது குடி. அதோடு கடமையைச் செய்யத் தவறிய குற்றம். ஒரு போர் வீரனுக்கு கட்டுப்பாடுதான் மிகவும் முக்கியம். இனிமேல் நீ வேலை நேரத்தில் குடித்தால் 'வொர்த்லஸ்' என்று உன்னை டிஸ்சார்ஜ் செய்து 'ஆர்மி கோர்ட்'டில் நிறுத்திவிடுவேன்...மார்ச் அவுட்!" என்று கத்தினார் கர்னல்.

சிறுகதை!

3

பின்பனிக் காலம். அங்கங்கும் ட்ரென்ச்கள் அமைக்கப்பட்டன. மணல் மூட்டைகளை அடுக்கி அரண் அமைத்து இயந்திரத் துப்பாக்கிகள், கை வெடிகள் மற்றும் வயர்லெஸ், பிற ஆயுத தளவாடங்களுடன் ஜாக்கிரதையாகக் காவல் காக்கத் தொடங்கினோம். முதல் நாள் மாலை மேலே ஒரு போர் விமானம் சீறிக்கொண்டு போனது. அது பாகிஸ்தானிய விமானமா என்று சந்தேகப்பட்ட அந்தக் கணத்தில் இந்திய நாட் விமானம் ஒன்று அதை வளைத்து 'பாம்'களைப் போட்டுத் தூள் தூளாக நொறுக்கியது. பட்டாலியன்களில் இருந்தவர்கள் 'ஜெய்ஹிந்த்' என்று உற்சாகத்தோடு ஆர்ப்பரித்தார்கள்.

நள்ளிரவுக்கு மேல் திடீரென்று எங்கள் 'ட்ரென்ச்'சில் பரபரப்பு ஏற்பட்டது. சார்ஜெண்ட் ஓடி வந்தான். சிறிது தூரத்தில் பாகிஸ்தானியப் படைகள் 'ட்ரென்ச்' அரண்களை உருவாக்குவதாகவும், பொழுது விடிவதற்குள் அவர்களை மடக்கி விட வேண்டுமென்றும் கர்னல் உத்தரவு போட்டிருப்பதாகவும் அவன் சொல்லிக்கொண்டிருந்தபோதே துப்பாக்கிக் குண்டுகள் சீறத் தொடங்கிவிட்டன.

மைக்கேல் பதுங்கிப் பதுங்கி எங்கோ போனான், பனிக்காலப் பின்னிரவில், துப்பாக்கிகளும், பயங்கர வெடி குண்டுகளும் காதைக் கிழிக்க வைத்த நேரத்தில், அனைவரது கவனமும் எதிரிகளை அழிப்பதில் இருந்த சமயத்தில்... திருட்டுத்தனமாக ஒரு 'ரம்' பாட்டிலை எடுத்துக்கொண்டு தட்டுத் தடுமாறி வந்து சேர்ந்தான் மைக்கேல்.

'வயர்லெஸ்' மூலமாக நிலைமையை ஹெட் குவார்ட்டஸுக்கு சொல்லிக் கொண்டிருந்த குஞ்சுப்

பணிக்கர் தன் தலையில் அடித்துக் கொண்டார். நான் அவன் பாட்டிலை பிடுங்கப் போனேன். யஷ்வந்த் சிங்கும், முகம்மது ராவுத்தரும், நாயுடுகாருவும் சற்றுத் தொலைவிலிருந்த 'பாக்' ட்ரென்சைத் தாக்கிக் கொண்டிருந்தார்கள்.

எவ்வளவு பயங்கரமான நேரம் அது! அந்தக் கட்டத்தில் தான் மைக்கேல் நிதானமாக, 'ரம்' பாட்டிலை ருசித்துக் காலி செய்து கொண்டிருந்தான்.

அது அவனுக்கு ஆருவது குடி!-கடமையிலிருந்து ஆருவது தடவையாக மீறுகிற குற்றம்!

சிறிது நேரம் எதிர் ட்ரென்சிலிருந்து சப்தமே கேட்கவில்லை. இப்போது என்ன செய்வது? நாங்கள் யோசித்தோம். குப்புறப் படுத்து ஊர்ந்து கொண்டே போய் அந்த ட்ரென்ச்சைக் கைப்பற்றலாமா?... எதிரிலிருந்து வருகிற குண்டுகளைப் பாத்தால் நிறைய ஆசாமிகள் இருப்பார்கள் போலிருக்கிறதே—

நேரமாக ஆக நிலைமை மோசமாகிக் கொண்டே வந்தது.

மைக்கேல் சொன்னுன்; "எல்லோரும் கேளுங்க! நான்தான் இப்போ உங்களுக்கு கமாண்டர். என் தலைமையிலே நீங்கநடக்கனும்... 'ஃபாக்ஸ் ஹோல் அட்டாக்'கிலே நாம் முன்னேறலாம்-என்ன சொல்றீங்க?"

குடித்துவிட்டு உளறும் வார்த்தைகளாக அன்றி, மிகுந்த புத்தி சாதுரியத்துடன் உறுதியாக வரும் வார்த்தைகள் என்று எனக்குத் தோன்றியது. ஓ!... மைக்கோலா பேசுகிருன்?

ஃபாக்ஸ் ஹோல் (Fox Hole) என்பது பதுங்கு குழி முறை. குள்ளநரியைப்போல மணலைப் பறித்துத் தரையோடு தரையாக ஒட்டி, தலையைத் தூக்காமல், முழங்கையாலேயே ஊர்ந்து செல்வது, எதிரியின் துப்பாக்கி சீறத் தொடங்கினுல், நம் பயனட் முனையால் இப்படி குழி பறித்து அதில் பதுங்கிக்கொண்டு செடிகொடிகளை இழுத்து நம் உடம்பின் மேல் போட்டு மறைத்துக்கொள்வது.

எதிரியின் ட்ரென்ச்சிலிருந்து விநாடிக்குவிநாடி குண்டுகள் அடைமழையாகப் பொழிந்துகொண்டிருக்கவே, வெறு வழியும் தெரியவில்லை-அந்த ட்ரென்ச்சைத் தீர்த்துக் கட்டாவிட்டால், அவர்கள் எல்லையை மீறி நம்மை ஊடுருவி விடுவார்கள். 'ஜெய்ஹிந்த்' என்று கத்தினுன் மைக்கேல்.

மூடு பனி உதவியது. அவன் தலைமையேற்று துப்பாக்கியுடன் தரையில் ஊர்ந்து செல்ல ஆரம்பித்தோம். துப்பாக்கி சத்தம் ஓய்ந்திருந்தது. தூரத்தில் எங்கோ டாங்கியின் தொடர்ந்த கர்ஜனை கேட்க ஆரம்பித்தது.

மைக்கேலைத் தொடர்ந்து ஐந்து பேரும் முன்னேறினேம். பாதி வழியில் மைக்கேலைக் காணவில்லை. எனக்குப் பகீரென்றது. குடிகாரன் பேச்சைக் கேட்டதற்கு இதுதான் முடிவா?......மதுப் பாட்டில் ஞாபகம் வந்து திரும்பி ஓடிவிட்டானு கயவன்?

தலையை உயர்த்திப் பார்க்கவும் அச்சமாக இருந்தது. எதிரி அரணிலிருப்பவர்கள் கண்ணில் பட்டுவிட்டால் அவ்வளவுதான்.

திடீரென்று மறுபடியும் துப்பாக்கிகள் கனல் கக்கத் தொடங்கின.

விடியலின் இருளில் பளீர் பளீரென்ற நெருப்புத் தெறிப்புகள்...

நாங்கள் அவர்கள் கண்களில் பட்டுவிட்டோம் போலிருக்கிறது. கடுமையானயுத்தம் 'ஜெய்ஹிந்த்'! என்று கூவிக்கொண்டே இயந்திரத் துப்பாக்கியை இயக்கினுர் ராவுத்தர். படபடவென்று குண்டுகளின் சத்தம். என் துப்பாக்கியும் வெறிகொண்டு வீறிட்டது. என் மனதில் பரபரப்பு—தாய் நாட்டைக் காக்கிற புனிதமான இப்பணியில் வெற்றி பெற்றேயாக வேண்டும் என்கிற நியாயமான ஆவேசம்......பல தீவிர உணர்ச்சிகளுக்கிடையில் மனதில் மைக்கேல் ஒரு புதிராகத் தோன்றிக்கொண்டேயிருந்தான்.

'சே! மிகவும் மட்டமான பிறவி! மதுவிற்காக நாட்டையே இலட்சியம் பண்ணுத துரோகி!'

"ஐயோ!" என்ற அலறல் அருகில் கேட்டது. யஷ்வந்த் சிங்கின் குரல்போலிருந்தது. தொடர்ந்து நாயரின் அலறலும், நாயுடுகாருவின் ஓலமும் கேட்டன. என்ன நடந்துவிட்டது...?

'மெஷின் கன்'னை ஓயவிடாத ராவுத்தரைத் தவிர, மூன்றுபேர்கள் எதிரிகளால் தாக்கப்பட்டுவிட்டார்கள். அவர்களுக்கு உயிரே போய்விட்டதா—அல்லது வெறும் காயம்தானு?' அறிந்து கொள்ள மனம் துடித்தது.

அதே சமயம் "அல்லா!" என்ற அலறல், ராவுத்தரின் இயந்திரத் துப்பாக்கியும் ஓய்ந்தது. கீழே விழுந்து புரண்டு துடித்தார் அவர்.

என் நிலையை மறந்து எழுந்து ஓடி "பாய்!......... என்ன ஆச்சு 'பாய்?" என்று அவரைத் தூக்கினேன்.

பட படவென்று குண்டுகள்! ஒன்று என் தோளின் தசையைப் பிய்த்துக்கொண்டு......எரிச்சல்—மரண வேதனை!

குப்புறப் படுத்து காயத்தைக் கையால் அழுத்திப் பிடித்துக் கொண்டேன். ரத்தம் வழிந்தது.

ராவுத்தரின் உடம்பில் எங்கோ குண்டு பாய்ந்திருக்க வேண்டும்... இப்போது என்ன செய்வது? மற்ற நண்பர்களும் அங்கங்கே குண்டு பாய்ந்து வேதனையால் முனகிய ஓசை என் இதயத்தில் இரத்த ஆறைப் பெருக்கியது.

ஒரு வழியும் புரியவில்லை. தோள் பட்டை வலி உயிர் போய்விடும் போல் இருந்தது.

அச்சமயம்—

எதிர் ட்ரென்சில் துப்பாக்கிகளின் ஓசை நின்றது. இனம் விளங்கா ஏதோ சத்தங்கள்...தட்டுத் தடுமாறி ஊர்ந்து சென்றேன். 'ட்ரென்ச்'சை அடையுமட்டும் என்மேல் துப்பாக்கிக் குண்டு ஏதும் பாயாதது வியப்பை அளித்தது. வலியுடன் முன்னேறினேன்.

அங்கே வியப்பு எனக்காகக் காத்திருந்தது.

கீழே இரத்த வெள்ளத்தில் மூன்று 'பாக்' வீரர்கள் துடித்துக் கொண்டிருந்தார்கள்.

மணல் மூட்டையில் சாய்ந்து நின்றுகொண்டிருந்த ஆசாமி—

மைக்கேல்!- துரோகி என நான் நினைத்த மைக்கேல்தான் அவன்!

முன்னதாகவே ஊர்ந்து வந்து எதிரியை அவர்களின் வளையிலேயே தாக்கியிருக்கிருன். "ஓ... மைக்கேல், என்னருமை மைக்கேல்! என்னை மன்னித்துவிடு, உன்னை தேசத் துரோகி என்று தவருக எண்ணி விட்டேன்!

மைச்கேல் கீழே கிடந்த பாகிஸ்தானிய வீரர்களையே வெறித்துக் கொண்டிருந்தான். மைக்கேலைப் பார்த்தேன். அவனைத் தொட்டு இழுத்தேன்... அப்படியே சரிந்தான் அவன். அவன் இடுப்பில் கொப்பளித்து நின்ற குருதி... ஓ!... என்ன கோரம்!

"மைக்கலே்......மைக்கேல்......" வாய்விட்டு அழுதேன்.

எதிரிகளைச் சாய்த்து விட்டு, அவர்களில் எவனோ ஒருவனின் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகி விட்டானே என் நண்பன்!...

தூரத்தில் ஜீப் வரும் சப்தம்.

"ஜெய்ஹிந்த்" என்று கத்தினேன். ஜீப்பில் இருந்தவர்களும் 'ஜெய்ஹிந்த்' என்று குரல் கொடுத்தார்கள்.

மைக்கேலைத் தோளில் தூக்கிப் போட்டுக்கொண்டு நடந்தேன். "பாகிஸ்தானிய முன்னணி ட்ரென்ச்சைத் தகர்த்த மகாவீரன் இதோ!" என்று அவன் உடம்பை கர்னலின் முன் போட்டேன். மற்றவர்களையும் கண்டுபிடித்து ஜீப்பில் போட்டுக்கொண்டு மருத்துவ முகாமிற்கு விரைந்தது ஜீப்.

4

ஐந்து பேரும் மது அருந்தி முடித்தோம்.

ஆறாவது நாற்காலி காலியாக இருந்தது. ஆனால் அதற்கு எதிரே மேசையில் முழு 'ரம்' பாட்டில் உட்கார்ந்திருந்தது.

பாகிஸ்தானியர்களின் குண்டுகளால் காயம்பட்ட ஐந்து பேரும் ஒரொரு அங்கங்களை இழந்ததோடு உயிர் பிழைத்துக் கொண்டோம். எதிரிகளைத் தாக்கி அவர்களைக் கொன்று தீர்த்த மைக்கேல் தன் உயிரையே இழந்துவிட்டான்.

ஒரு ஆண்டுக்குப் பின் இப்படி இந்த இடத்தில் நாங்கள் சந்திப்பது என செய்துகொண்ட முடிவுப்படி இங்கே சந்தித்திருக்கிறோம்.

அதோ அந்த ஆறாவது ஆசனம் அவனுக்காகத்தான். மைக்கேல்! எங்கள் நண்பா! ... நீ குடிக்கக் கூடாது என்று கர்னல் சொன்னார். நாங்களும் சொன்னோம். ஆனால் அதே குடியால் நீ எப்பேர்ப்பட்ட காரியத்தைச் சாதித்தாய் ...... நண்பா! நீ ஆவியாகவாவது வருவாயா? எங்களின் இந்த அன்பு அஞ்சலியை ஏற்றுக் கொள்வாயா?

ஐந்து பேரும் அந்த ஆறாவது பாட்டிலையும். காலியாக இருந்த ஆறாவது ஆசனத்தையும் வெகு நேரம் மௌனமாக வெறித்துக் கொண்டு இருந்தோம்.

பிரதேச, மொழி, இன, மதப் பாகுபாடுகளால் வேற்றுமைப் படாது, பாரதமாதா என்கிற ஒரு தாய் வயிற்றில் உதித்த மக்களாகிய நாங்கள், எங்கள் ஒரு சகோதரனை இழந்த துக்கத்தை நினைவுகூர்ந்து துயர் உற்றோம்.

பின்பு எழுந்து மெல்ல நடந்து திக்குக்கு ஒருவராகப் பிரிந்து போனோம். *

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பை நிறைவேற்றிவிட்டு, கம்பனின் கயமை பற்றியோ, இராமனின் கீழ்மைபற்றியோ, புராணக் கொடுமைகளைப் பற்றியோ நாம் எடுத்துவைக்கும் கருத்துக்கள் யானைப் பசிக்குச் சோளப் பொறிகளாகப் போய்விடுகின்றன.

எனவே, நாமும் நம் போர் முறையை மாற்றிக் கொள்ள வேண்டும்; போர்க்கருவிகளையும் மாற்றிக்கொள்ள வேண்டும்.

கம்பன் பெயரால், இலக்கிய மேடைகளின் துணைகொண்டு, பாட்டரங்கம், பட்டி மண்டபங்களை ஆயுதங்களாகக் கொண்டு நம்மை எதிர்ப்பவர்களை, நாமும் அதே நெறியில் எதிர்த்தாக வேண்டும்.

அப்போதுதான் பகையின் பல்லைப் பிடித்து நம்மால் பார்க்க முடியும்.

இராமன் விழாவைக் கம்பன் பெயரால் கொண்டாடுவதைப் போல் இராவணன் பெயரால் நாம் விழா எடுக்கவேண்டும். இராமனின் பெருமை கூறும் பாட்டரங்கங்களை இராவணன் பெருமை கூறும் பாட்டரங்கங்களைக் கொண்டு சந்திக்க வேண்டும்.

இராமனைத் தெய்வமாக்கும் பட்டி மண்டபங்களை, இராமனின் ஈனத்தனங்களை எடுத்து வைக்கும் பட்டி மண்டபங்களைக் கொண்டு முறியடித்தாக வேண்டும்.

அதற்கெல்லாம் ஒரே வழி, நாடெங்கும் 'இராவணன் விழா' கொண்டாடுவதுதான். இராமனுக்குக் கம்பன் என்றால், இராவணனுக்கு ஈரோட்டுக் குழந்தை இருக்கிறார்.

ஆமாம்!

இராம காவியத்தை, இராவண காவியத்தைக் கொண்டு எதிர்ப்போம்!! கம்பன் காவியத்தில் காட்டப்படும் சுவையைக் குழந்தைக் காவியத்தினைக் கொண்டு கொடுப்போம்!

அப்போதுதான் ஈனச் சுவைக்கும், எழுச்சிச் சுவைக்கும் உள்ள வேறுபாட்டினை நாடு உணர்ந்துகொள்ள முடியும்.

இராவணனை மாசு படுத்தப்படும் கம்பன் விழாக்கள், இராவணனின் மாண்புகளையும், இராமனின் இழிபண்பினையும் கேட்டுக் கதிகலங்க வேண்டும்.

கம்பனைப்போல் உண்டா என்னும் கருத்துக் குருடர்களை, இராவண காவிய ஒளியேற்றி விழிகளைப் பெறச் செய்யவேண்டும்.

இத்தகைய பணிகளில் ஈடுபட வேண்டியவர்களும், ஈடுபட்டிருக்க வேண்டியவர்களும் காரைக்குடி நண்பர்களே என்பதால் தான் தலைப்பில் சற்று சூட்டைக் காட்ட வேண்டியதாகி விட்டது. எப்போதோ செய்திருக்க வேண்டியதை இனியாவது செய்யவேண்டும் என்பதற்காகத்தான், உறவிலும், உரிமையிலும் நம்பிக்கைக் கொண்டு இப்படிச் சுட்டிக் காட்டிட வேண்டியதாயிற்று.

செய்ய வேண்டியதைச் செய்து விட்ட பிறகுதான் இப்படிச் சொல்ல வேண்டியவர்களிடம் சொல்லுகிறேன் என்பதை மட்டும் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கடந்த ஆண்டு, மே மாதம் இராவண விழா என்ற பெயரில் விழாவினை நடத்தி, இராவண காவியப் புலவர் குழந்தையவர்கட்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்த புதுவையிலிருந்துதான் 'காரைக்குடித் தோழர்களே! கடமையைச் செய்வீர்' என்னும் வேண்டுகோளை விடுக்கின்றேன்.

புதுவையில் நடத்திவிட்டோம்; நாடெங்கும் இராவண விழா நடைபெறும் என்று நம்பி, நாமக்கல் நடத்தப் போகிறது என்று மகிழ்ந்து, ஏமாற்றத்திற்கு ஆட்பட்ட பிறகுதான் 'அறிவியக்கத் தோழர்களே! இராவண விழா நடத்துவீர் என்று விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இராவண காவியத் தடையும் நீங்கி, இராவண காவியம் விற்பனைக்குக் கிடைக்கும் இவ்வேளையில் நம் பணி எளிமையானது.

பகுத்தறிவு மன்றங்களும், அறிவியக்க அமைப்புகளும், காரைக்குடி உடன்பிறப்புகளும், காதுகள் இல்லையா என்று கேட்டானே என்று கடுமை காட்டாமல் இராவண விழாக் கொண்டாட முன் வர வேண்டும்!!

உங்களிடம் எத்தனை முறை வேண்டுமானாலும் மன்னிப்பை வேண்டுகிறேன், காரைக்குடி நண்பர்களே! கடமையைச் செய்ய கனன்று எழுங்கள்!! •

தொழிலாளர் தேர்ந்தெடுப்பது

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுதான்.

தச்சுத்தொழிலாளியான வீரராகவன் எப்பொழுதும்
வாங்குவது தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுகளே!



இன்றே வாங்குங்கள்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

ஒரு லட்சம் ரூபாய் பரிசு பெறுங்கள்.
மோத்தப் பரிசுத் தொகை *

ரூ. 10,50,000

மொத்த வரிசைகள்: மூன்று

மொத்த பரிசுகள் 3198

முதல் பரிசு:
ஒரு லட்சம் ரூபாய்
(ஒவ்வொரு வரிசைக்கும்)

குலுக்கல் நாள்:
29-4-1972

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை: ரூ. 1/- தான்

தமிழ்நாடு பரிசுச்சீட்டு இதுவரை 276
லட்சாதிபதிகளை உருவாக்கியுள்ளது!

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், சென்னை-2.
... வெளியீடு: இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை.
தமிழ்நாடு அரசு, சென்னை-9
... வெளியீட்டுக்கு உரியது.

ஆசிரியர் ... அவர்களால், காஞ்சிபுரம்-...
... வெளியிடப்படுகிறது.